மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அந்தப் பணிக்குத் தேவையான வகையில், எந்தெந்த உறுப்பினர்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ, அந்த உறுப்பினர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்வார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியிலே முற்போக்கு விவசாயி என்று ஒரு விவசாயி உறுப்பினராக இருப்பார் என்று சொன்னார்களே. முற்போக்கு விவசாயி என்பதற்கு ஏதாவது நார்ம்ஸ் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பயிர் தொழிலிலே ஈடுபாட்டோடு ஈடுபட்டுள்ளவர்கள். அதிலே மிக அதிகமாக ஆர்வம் உள்ளவர்கள்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நில மேம்பாடு திட்டம் மதுரை போன்ற இடங்களில் எல்லாம் தற்போது இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே எம்.எல்.ஏக்கள் பங்கு பெற்றிருப்பதாகவும் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் அப்படி இருக்கக்கூடிய எம்.எல்.ஏக்கள் யார் யார்? இந்த நில மேம்பாடு திட்டத்தால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள், வி.பி. பாலசுப்பிரமணியன், சந்திரசேகரன், குப்புசாமி, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜக்கையன், முற்போக்கு விவசாயி என்ற முறையில் டபிள்யூ பி.ஏ. நாகராஜன் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நிலத்தை எப்படிச் சீர்படுத்துவது, கடினமான நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவருவது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்வார்கள். அதற்கு வேளாண்மைத் துறை, பொறியியல் துறைகளினுடைய ஆலோசனை பெறப்படும்.

தமிழ்நாட்டில் மேலும் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

395. *(வினா 22044) திரு. இரா. தாமரைக்கனி: திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மேலும் ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க செயற்குறிப்புள்ளதா?

(ஆ) புதிய கல்லூரி எங்கு அமைக்கப்படும்?

(இ) எப்போது முதல் கல்லூரி செயல்படும்?

1984 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிகுளத்தில் அமைக்கப்படும்.

(இ) 1984–85 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்படலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரிகள் அமைப்பதே நவீன விவசாய முறைகளையும் புதிய ரக, விதைகளைக் கண்டுபிடிப்பதும் ஆராய்ச்சி செய்வதற்கும் தான். ஆனால் விவசாயக் கல்லூரிகளிலே படித்துப் பட்டம் பெற்றவர்கள் விவசாய ஆராய்ச்சி செய்யாமல் பேங்குகளிலே அதிகாரிகளாகப் போய் வேலைபார்க்கிறார்கள். ஆகவே இப்படி அவர்கள் பட்டப் படிப்பு படித்தும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அது பயன்படும் வகையில் வேலைவாய்ப்பு மாற்றி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நம்முடைய தேவைக்குரிய அளவுக்கு விவசாயப் பட்டதாரிகள் இப்போது இருக்கிறார்கள். இன்னும் பல புதிய திட்டங்களை அரசு அறிமுகப்படுத்துகிறபோது அதற்குத் தேவையான அளவில் அவர்கள் இருக்கவேண்டுமென்ற என்ற அளவில் புதிய கல்லூரிகளைத் திறக்கிறோம். ஆகவே அந்த அளவில் நம்முடைய துறையினுடைய தேவையை நிறைவேற்றுகின்ற நிலையில் எந்த விதமான சிக்கலும் இருக்காது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி நெல்லை மாவட்டத்திலேயும் தஞ்சை மாவட்டத்திலேயும் அமைக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்திலே வேளாண்மைக் கல்லூரியை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? அப்படி இல்லாவிட்டால் கால்நடைக் கல்லூரியையாவது ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதிலேயிருந்து நாம் நடுநிலையோடு முடிவு செய்கிறோம் என்பது தெரிகிறது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, வருகிற கல்வியாண்டிலே ஆரம்பிக்கப்பட இருக்கிற இந்த விவசாயக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்ப நிலையில் இருக்கிறது. பின்னர்தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, வேளாண்மைக் கல்லூரி சம்பந்தமாக ஒரு நீண்டகாலக் கோரிக்கை இருக்கிறது. குமரி மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாக ஒரு கூட்டத்திலே பேசினார்கள். இந்த ஆண்டு அல்ல, அடுத்த ஆண்டிலாவது குமரி மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நெல்லை மாவட்டம் குமரி மாவட்டத்திற்குப் பக்கத்திலேதான் இருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, வருகிற கல்வி ஆண்டிலே விவசாயக் கல்லூரியைப் போல் 2 ஆவது 3 ஆவது ஆரம்பிக்கப்படும் விவசாயக் கல்லூரியை குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே எப்போது ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது சொல்ல முடியாது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயக் கல்லூரியிலே படித்து பட்டம் பெற்றவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லை என்றால் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : வேலைக்கு ஆள் இல்லை என்ற பற்றாக்குறைதான்.

தமிழ்நாட்டில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி நிறுவும் திட்டம்.

396. *(வினா 22308) திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் புதியதாகக் கால்நடை மருத்துவக் கல்லூரி நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆம்.

திரு செ. செம்மலை : தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்பட இருக்கிற கால்நடைக் கல்லூரி எங்கு ஆரம்பிக்கப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? சேலத்திலே அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.